


தருமபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோடு ஜெர்தலாவ் கிராமத்தில் நீட் தேர்வு எழுத இருந்த மாணவி ரோஷினி (18) தூக்கிட்டு உயிரிழந்த நிலையில் கழகத் தலைவர் அவர்களின் ஆலோசனைப்படி தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் மற்றும் மாநில மாணவர் அணிச் செயலாளர் வீரமணி ஆகியோர் இறந்த மாணவி ரோஷினியின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறினர். உடன் மாநில நிர்வாகிகள் சுடப்பட்டி.சுப்பிரமணி, சத்தியமூர்த்தி,எம்.வீ.டி.கோபால்,ஆனந்தன், பி.கே. அன்பழகன், வழக்கறிஞர் அணி டி.சந்திரசேகர், முன்னாள் எம்.எல்.ஏ., ஜி.எல்.வெங்கடாச்சலம்,பி.கே.முரளி, மாணவர் அணி சந்தர் மற்றும் கழகத்தினர் உடன் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு சுற்றுச்சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் எஸ்.கார்த்திக்குமார் ஏற்பாட்டில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு அறுசுவை உணவினை மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கினார். இதில் ஒன்றியக் கழகச் செயலாளர் தாமோதரன், சி.எம்.கிருஷ்ணகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.பி.சுப்பிரமணியம் உள்பட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தி.மு.க. மாணவர் அணி சார்பில் சென்னையில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த வேண்டுகோள்!



வேலூர், ஜூன் 23 - "தமிழ்நாட்டின்கல்விஉரிமையை பறிக்கும் ஒன்றிய பா.ஜ.கஅரசின் PMShri திட்டம், CBSE பள்ளிகளில் ஒன்பதாம்வகுப்பில்மாணவர்களுக்குமும்மொழிதிணிப்பை கண்டித்தும் உயர் கல்வித் துறைமுடக்கும்VBSAஉயர்க் கல்விக்கான ஒரே ஆணையம் மசோதாவை திரும்ப பெறக்கோரியும்" தி.மு.க. மாணவரணி சார்பில் வரும் இன்று (ஜூன் 23ந்தேதி) காலை 10.00மணி அளவில் சென்னைசைதாப்பேட்டை கலைஞர் வளைவு அருகில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு மாணவர்களின் கல்வி உரிமையையும், நமது மாநிலத்தின் இறையாண்மையையும் காக்க வேண்டியது நமது கடமை ஆகும்.

எனவே, வேலூர்வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய,பகுதி,பேரூர்மாணரணிநிர்வாகிகள்பெரும்திரளாக பங்கேற்க செய்து கருப்பு சட்டையை அணிந்து, கழகக் கொடியேந்திநிர்வாகிகள்திரண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

### தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# சென்னையில் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## திருப்பத்தூர் மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டச் செயலாளர் க.தேவராஜி வேண்டுகோள்!



திருப்பத்தூர், ஜூன் 23 - தி.மு.க. மாணவரணி சார்பில் சென்னையில் இன்று 23ஆம் தேதி நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பத்தூர் மாவட்ட மாணவரணி நிர்வாகிகள் பெரும்திரளாகப்பங்கேற்க வேண்டுமென மாவட்டச் செயலாளர் க.தேவராஜி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டின் கல்வி உரிமை பறிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் PM Shri திட்டம், சி.பி.எஸ்.இ. பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பில் மாணவர்களுக்கு மும்மொழிதிணிப்பைகண்டித்தும், உயர்கல்வி துறையை முடக்கும் விக்சித் பாரத் சிக்க்ஷா அதிஷ்தான் (VBSA உயர்கல்விக்கான ஒரே ஆணையம்) மசோதாவை திரும்ப பெற கோரியும், தி.மு.க. மாணவரணி சார்பில் இன்று (ஜூன் 23ஆம் தேதி செவ்வாய்க்கிழமை)காலை10.00மணிக்கு சென்னை சைதாப்பேட்டை கலைஞர் வளைவு அருகில்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

எனவே திருப்பத்தூர் மாவட்டத்திற்குஉட்பட்ட மாணவரணி நிர்வாகிகள் பெரும் திரளாக திரண்டு கண்டன ஆர்ப்பாட்டத்தை வெற்றி பெற செய்யவேண்டும்.

இவ்வாறுஅவர்அறிக்கை விடுத்துள்ளார்.

# நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது!

நாமக்கல், ஜூன் 23- நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமையில், ஆலோசனைக் கூட்டம் திருச்செங்கோட்டில் உள்ள மாவட்ட கழக அலுவலகமான தளபதி அரங்கில் நடைபெற்றது.

மாநில மாணவர் அணி துணை செயலாளர் சுரேஷ் குமார் முன்னிலை வகித்தார். மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியன் வரவேற்றார்.

கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் வரும் 28ஆம் தேதி நவீன தமிழ்நாட்டின் சிற்பி தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் மாணவர்களுக்கு கருத்தரங்கம் திருச்செங்கோடு சி.எச்.பி.காலனியில் உள்ள கொங்கு திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கருத்தரங்கில் மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா கலந்துகொண்டு சிறப்புரையாற்ற உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் பகுதிகளில் உள்ள மாணவரணி நிர்வாகிகள் மற்றும் இளைஞர்கள் கலந்துகொள்ள வேண்டும் என தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### ‘நீட்’ மறுதேர்வு அச்சம்

# தமிழ்நாட்டில் 4 நாட்களில் 3 மாணவிகள் தற்கொலை!

தருமபுரி, ஜூன் 23- தமிழ்நாட்டில் நீட் மறுதேர்வு எழுதவிருந்த மாணவிகள், தேர்வு பயம் மற்றும் கடுமையான மன உளைச்சல் காரணமாக அடுத்தடுத்து தற்கொலை செய்து கொண்ட நிகழ்வுகள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. கடந்த 4 நாள்களில் மட்டும் 3 மாணவிகள் தங்களது உயிரை மாய்த்துக் கொண்டுள்ளனர்.

**பயத்தால் மாணவி ரோஷ்னி தற்கொலை**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு அருகேயுள்ள எண்டப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் ராம கிருஷ்ணன் (கூட்டுறவு சர்க்கரை ஆலை ஊழியர்). இவரது மகள் ரோஷ்னி (18) பிளஸ் 2 முடித்துவிட்டு, மருத் துவராகும் கனவோடு நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பயிற்சி மய்யத்தில் நீட் தேர்வுக்காக படித்து வந்தார்.

நேற்று (21.6.2026) தரும புரியில் நடைபெறவிருந்த நீட் மறுதேர்வை எழுத ரோஷ்னி சொந்த ஊருக்கு வந்திருந்தார்.

கடந்த சில நாள்களாக தேர்வு பயத்தால் மன உளைச்சலுடன் சோர்வாக காணப்பட்ட ரோஷ்னி, நேற்று முன்தினம் (20.6.2026) மாலை வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். பாலக்கோடு காவல் துறையினர் உடலைக் கைப்பற்றி உடற்கூராய்வுக்கு அனுப்பி வைத்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.

**மாணவி கோபிகா தற்கொலை!**

சேலம் மாவட்டம் இடைப் பாடி அருகே கொங்கணாபுரம் வெள்ளாளபுரத்தைச் சேர்ந்தவர் சேகர். இவரது மகள் கோபிகா (19). கடந்த 2 ஆண்டுகளாக நீட் தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறாத நிலையில், இந்த ஆண்டு 3ஆவது முறையாக கடந்த மே 3ஆம் தேதி தேர்வு எழுதியிருந்தார். ஆனால், அத்தேர்வு ரத்தானதால், ஜூன் 21 அன்று நடைபெறவிருந்த மறுதேர்வை எழுதத் தயாராகி வந்தார்.

4-ஆவது முறையாக தேர்வு எழுத வேண்டிய அச்சத்தில் இருந்த கோபிகா, 19.6.2026 அன்று மதியம் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கோபிகாவின் அறையில் காவல் துறையினர் கைப்பற்றிய கடிதத்தில்,

"டியர் மம்மி, டாடி... நான் எவ்வளவோ முயன்று படிக்கிறேன், ஆனால் என்னால் முடியவில்லை. எல்லோரும் என்னை டாக்டர் என்று கூப்பிட்டீங்க, ஆனால் உங்கள் ஆசையை என்னால் நிறைவேற்ற முடியவில்லை. தம்பியை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். மம்மி, டாடி மிஸ் யூ" என்று எழுதியிருந்தார்.

**4 நாட்களில் 3 மாணவிகள் தற்கொலை சோகத்தில் தமிழ்நாடு**

நீட் தேர்வு அச்சம் காரணமாக தமிழ்நாட்டில் மாணவிகள் தற்கொலை செய்துகொள்ளும் தொடர் நிகழ்வுகள் பெற்றோர் களிடையே பெரும் சோகத்தையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

ஜூன் 17: கோவையைச் சேர்ந்த மாணவி அனு கீர்த்தனா தற்கொலை.

ஜூன் 19: சேலத்தைச் சேர்ந்த மாணவி கோபிகா தற்கொலை.

ஜூன் 20: தருமபுரியைச் சேர்ந்த மாணவி ரோஷ்னி தற்கொலை.

இத்தொடர் தற்கொலை சம்பவங்கள் குறித்து அந்தந்த பகுதி காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### நாமக்கல்லில் GEN Z DMK சந்திப்பு கூட்டம்!

# இளைஞர்களுக்கான புதிய முயற்சிகள் அறிமுகம்!

## பெண்கள் பாதுகாப்பை வலியுறுத்தி தமிழ்நாடு அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பினர்!

நாமக்கல், ஜூன் 23- நாமக்கல்லில் GEN Z DMK NAMAKKAL சார்பில் சந்திப்பு கூட்டம் நிர்மலா ஸ்போர்ட்ஸ் வில்லேஜில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு GEN Z DMK NAMAKKAL சந்திப்பு ஒருங்கிணைப்பாளர் கடல் அரசன் கார்த்தி வரவேற்புரை ஆற்றினார்.

தொடர்ந்து, தமிழ்நாடு அரசு மறந்த தமிழ்த் தாய் வாழ்த்து மற்றும் இளைஞர்களின் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர் இளைஞர்களின் தேவைகள் மற்றும் GEN Z இளைஞர்களின் பங்கு குறித்து சிறப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்வில் சமூக ஊடகத்தின் உட்பக்கம் நேரானது என்ற தலைப்பில் சூ.க.தாரணி, "Reelsல இருந்து Realityக்கு வாங்க BRO..." என்ற தலைப்பில் தருண்குமார், "அவதூறுகளை அழித்து நோக்கி தாக்குகளை வீழ்த்துவோம்" என்ற தலைப்பில் உதயம் கே.நந்தகுமார், "நாங்கள் வீழ்வோம் என்று நினைத்தாயோ மீண்டும் எழுவோம்" என்ற தலைப்பில் நந்தகோபால், "தி.மு.க பயமும், தி.மு.க வெல்லும்" என்ற தலைப்பில் ம.மோகனித் ஆகியோர் உரையாற்றினர்.

இதனைத் தொடர்ந்து GEN Z இளைஞர்களின் கலந்துரையாடல் நடைபெற்றது. நிறைவாக GENZ DMK NAMAKKAL சந்திப்பு ஒருங்கிணைப்பாளர் அன்பில் சத்தியசீலன் நன்றி கூறினார்.

நாமக்கல் GENZ மன்றத்தின் நோக்கம் நிறைவேறுவதற்காக புதிய முயற்சிகள் மற்றும் செயல் திட்டங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து நாமக்கல் பரமத்தி சாலையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை முன்பு இளைஞர்கள் மற்றும் பெண்கள் அனைவரும் கூடி தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகளை எதிர்த்து கோஷங்கள் எழுப்பி இது குறித்து சட்டமன்றத்தில் எடுத்துரைத்தும் அதற்கு பதில் அளிக்காத முதலமைச்சர் ஜோசப் விஜயை கண்டித்தும் கோஷங்களிட்டனர்.

இதனைத் தொடர்ந்து பெண்கள் பாதுகாப்பை வலியுறுத்தி கருப்பு வண்ண பலூன்களை பறக்கவிட்டனர்.

# ஈரோடு மாநகராட்சியில் தூய்மைப் பணியாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம்!

ஈரோடு, ஜூன் 23- ஈரோடு மாநகராட்சியில் தூய்மைப் பணிகளைத் தனியார்மயமாக்கும் நட வடிக்கைக்கு எதிர்ப்பு தெரி வித்து, தூய்மைப் பணியா ளர்கள் மாநகராட்சி அலுவ லகத்தை முற்றுகையிட்டு திடீர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள் ளனர். 60 வார்டுகளை சேர்ந்த நான்கு மண்டலங் களுக்கு உட்பட 500க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் போராட்டம் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழ்நாட்டில் கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம் உள்ளிட்ட 12 மாநகராட்சிகளில் தூய்மை பணிகளை தனியார் பங்களிப்பு முறையில் மேற்கொள்ள தமிழ்நாடு அரசு திட்ட மிட்டு ள்ளது. இதற்கான ஒப்பந்தம் விடு வதற்கான ஏற்படும் செய்யப் படுவதாக கூறப்பட்டு வரு கிறது. இதற்கு தமிழ்நாடு முழுவது தூய்மைப் பணியாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் தூய்மைப் பணிகளை தனியார்மயத்தை தடுத்து நிறுத்த கோரி ஈரோட்டில் தூய்மைப் பணியாளர்கள் இன்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தூய்மைப் பணிகளை தனியாரிடம் ஒப்படைக்கக்கூடாது என வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர். ஈரோடு மாநகராட்சி அலுவலகத்திற்குள் திரண்ட தூய்மைப் பணியாளர்கள் தங்களது எதிர்ப்புகளைப் பதிவு செய்து கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

தூய்மைப் பணிகளைத் தனியாரிடம் ஒப்படைக்கும் அரசாணைக்கு எதிர்ப்பு தெரிவித்து, அப்பணியை அரசு மூலமாகவே தொடர வேண்டும் என வலியுறுத்து கின்றனர். 500க்கும் மேற்பட்ட தூய்மைப் பணி யாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதால் மாநக ராட்சியில் இன்று காலை செய்ய வேண்டிய தூய்மை பணிகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. போராட்டத்தில் ஈடுபட்ட வர்களுடன் அதிகாரிகள் தற்பொழுது பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.




நாகை மாவட்டம் கீழ்வேளூர் ஒன்றியம் அத்திப்புலியூரில் சோபா மாடல் அரசின் முதல்வர் நடிகர் விஜய் விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதியின்படி உத்திரவாதமான கூட்டுறவு பயிர்க் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்யக்கோரி திருவோடு ஏந்தி மண்சோறு சாப்பிட்டு உண்ணாவிரதப் போராட்டம் செய்தனர்.

# செங்கம் அருகே சாலை வசதி இல்லாததால் சேற்றில் நடந்து செல்லும் பள்ளி மாணவர்கள்!

## வீடியோ வைரல்!

செங்கம், ஜூன் 23 - செங்கம் அருகே சாலை வசதிஇல்லாததால்சேற்றில் பள்ளி மாணவர்கள் நடந்து செல்லும் வீடியோ வைரலாகி உள்ளது. செங்கம் அடுத்தபிஞ்சூர்கிராமத்தில் பெரும்பாலான இடங்களில் மண் சாலையாகவே உள்ளது.

இந்நிலையில் தற்போது பெய்தும் வரும் தொடர் மழை பெய்து வருவதால் மண் சாலையில் மழைநீர் தேங்கி சேறும் சகதியுமான உள்ளது.

பிஞ்சூர் பள்ளிக்கு செல்லும் சாலையில் தினமும் பொதுமக்கள்மற்றும்பள்ளி மாணவ, மாணவிகள், விவசாயிகள் சென்று வருகின்றனர்.தற்போதுசேறும்சகதியுமான உள்ளதால் பொதுமக்கள், வாகன ஓட்டிகள் எனசேரும்சகதியும்நிறைந்த சாலை வழியாக செல்லும் போது விபத்துகள் நடக்கிறது.

மேலும் பள்ளி மாணவர்கள் தினமும் சேறும் சகதியுடான மண் சாலையில் நடந்து செல்கின்றனர். இதனால்பெரும்சிரமமடைந்து வருகின்றனர். இந்த அவல நிலையை கிராம ஊராட்சி நிர்வாகம் கண்டும் காணாமல்அலட்சியம்காட்டி வருவதாகபல்வேறுகுற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

எனவே மண் சாலை, சிமெண்ட் சாலை, தார் சாலையாக தரம் உயர்த்தி சாலை அமைத்து தர வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

பிஞ்சூர் கிராமத்தில் சேறும் சகதியுமான மண் சாலையில் பள்ளி மாணவ, மாணவியர் நடந்து சென்ற வீடியோ சமூக வலைதளத்தில் வைரல் ஆகி வருகிறது.